

கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் விழுப்புரம் மாவட்ட அளவிலான திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், ஏனாதி மங்கலம் ஊராட்சியில் இரவை பகலாக்கும் மின்னொளி தளபதி கோப்பை கபடி திருவிழா விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்ற மாபெரும் விளையாட்டு போட்டியில் கழக துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், க.மும்மூர்த்தி, கல்பட்டு வி.இராஜா, கை.ரா.சடகோபன், கு. தீனதயாளன், வே.கில்பர்ட் ராஜ், நகர செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி கூட்டம் தக்கோலம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பவானி வடிவேலு, தொகுதி பொறுப்பாளர் சூர்யா வெற்றிகொண்டான், தலைமை செயற்குழு உறுப்பினர் மு.கண்ணையன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர், ஒன்றிய, நகர, பேரூர் மகளிரணியினர் கலந்து கொண்டார்கள்.


### நாகப்பட்டினம் நகராட்சி

# சாலை மேம்பாட்டுக்குத் தேவையான நிதி வழங்கப்படும்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

சென்னை, பிப்.25 -

“நாகப்பட்டினம் நகராட்சி சாலை மேம்பாட்டுக்குத் தேவையான நிதி வழங்கப்படும்” என, சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு குறிப்பிட்டார்.



சட்டப்பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** நாகப்பட்டினம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளில் கழிவுகள் தேங்கி, கழிவுநீர் வெளியேறுவது என்பது அடிக்கடி நடக்கிறது. எனவே, கழிவு நீர் உறிஞ்சு வாகனம், தூர் வாரும் இயந்திரம் போன்றவை தேவைப்படுகின்றன.

கோடைகாலம் என்பதனால் குடிநீர் விநியோகம் செய்ய 12,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு குடிநீர் லாரி தேவைப்படுகிறது. அதுபோல சாலைப் பணிகளும் அங்கே செய்ய வேண்டியிருக்கிறது. கண்ணாடித் தோட்டம், பாத்திமா பள்ளி வளாகம், அமிர்தா நகர் போன்ற பகுதிகளில் சாலைப் பணிகள் செய்ய வேண்டியிருக்கிறது. நகராட்சியில் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அந்த சாலைப் பணிகளையும் செய்வதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.என். நேரு:** நாகப்பட்டினம் இப்போது வளர்ந்த நகராட்சியாக இருக்கிறது. எனவே, தேவைப்படும் வாகனங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக்கொடுத்தால், அந்த வாகனங்களை உங்கள் நகராட்சிக்கு உடனடியாகத் தருவதற்கு துறை தயாராக இருக்கிறது.

மேலும், இப்போது தலைவர் அவர்கள், பெரிய நகராட்சிகளிலே மிகவும் மோசமடைந்த சாலைகளை சீர்திருத்துவதற்காக பணம் தந்திருக்கிறார்கள். நாகப்பட்டினத்திற்கு ஏற்கெனவே தரப்பட்டிருக்கிறது. அது எந்தளவிற்கு; இப்போது tender எல்லாம் விடப்பட்டிருக்கிறது, எந்த அளவிற்கு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, உறுப்பினர் அவர்களுடன் நேரடியாகப் பேசி தேவைப்படின் சாலைகளைச் செப்பனிடுவதற்குரிய பணம் தரப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின்

# இணையதளத்தில் புகார் மேலாண்மை அமைப்புக்கான கூடுதல் வசதி!

## பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!






சென்னை, பிப்.25 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.2.2026) சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் www.tnscw.tn.gov.in என்ற இணையதளத்தில் புகார் மேலாண்மை அமைப்பிற்காக (Complaint Management System) உருவாக்கப்பட்டுள்ள கூடுதல் வசதியினை பொது மக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் www.tnscw.tn.gov.in இணையதளமானது மகளிர் தங்கள் புகார்களை பதிவு செய்யவும், அப்புகார்களின் நடவடிக்கை விவரம், விசாரணை நிலவரம் ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆணையம் வாயிலாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், புகார் மனுக்களின் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளவும், புகார்தாரர்கள் கண்காணித்திடவும் இயலும்.

பெறப்படும் புகார் மனுக்கள் அனைத்தும் இணையதளம் வழியாகவே தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பப்படும். கள அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொண்ட பின், அதன் விவரத்தையும் இந்த இணையதளம் வழியாகவே சமர்ப்பிக்க ஏதுவாக இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவி திருமதி அ.ச. குமரி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலத் துறை இயக்குநர் திருமதி மா.சௌ. சங்கீதா, தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட இயக்குநர் (TNWeSafe) திருமதி ஆஷா அஜித், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பாலியல் கொடுமைகளுக்கு எதிராக –

# பெண்கள் புகார் கொடுக்க தைரியம் கொடுத்தது ‘திராவிட மாடல்’ அரசு!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி விளக்கம்!

சென்னை, பிப்.25 -

பாலியல் கொடுமைகளுக்கு எதிராக பெண்கள் புகார் கொடுக்க தைரியம் கொடுத்தது திராவிட மாடல் ஆட்சி என்று சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்

இது தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின் போது குறுக்கிட்டு அமைச்சர் எஸ். ரகுபதி அளித்த விளக்கம் வருமாறு :

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில் தான் விழிப்புணர்வை நாம் இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

POCSO வழக்குகளில் ஒருவர் இன்றைக்கு புகார் கொடுக்க வருகிறார் என்று சொன்னால், அதற்கான தைரியத்தை இந்த அரசு தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் பொள்ளாச்சி வழக்கைப் போல மூடி மறைக்கவில்லை.



எனவே, இந்த அரசு, யார் யார் எல்லாம் அங்கே புகார் கொடுக்க வருகிறார்களோ! அதை விசாரித்து அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இன்றைக்கு அரசு கொடுக்கின்ற தைரியம் தான் இன்றைக்கு அவர்களுக்கெல்லாம் காரணம் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதுபோன்ற வழக்குகளை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வட மாநிலங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். எத்தனை வழக்குகள் அங்கு பதியப் பட்டிருக்கிறது என்று!

அதாவது சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கும் ஆனால், வழக்குகள் பதிவு செய்யப்பட மாட்டாது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.

### “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை”யை முடக்குவதற்கான சதியை

# மதிநுட்பத்தோடு முறியடித்தவர், முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## சட்டப்பேரவையில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!

**சென்னை, பிப்.25 -**

**சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, கலைஞர் உரிமைத் தொகையாக 5000 ரூபாயை திராவிட மாடல் அரசு வழங்கியது குறித்துப் பேசிய போது குறுக்கிட்ட நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, “கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை முடக்குவதற்கான சதியை மதிநுட்பத்தோடு முறியடித்தவர் நமது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்” என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.**



நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு இது குறித்து குறிப்பிட்டதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ ஒரு கற்பனையான ஒரு விஷயத்தில் அரசு செய்தது என்று சொல்கிறார். அது கற்பனை அல்ல. என்னென்ன செய்திகள் டெல்லி மாநகரத்தில் நடந்தது. யார் நீதிமன்றத்தினுடைய கதவுகளை ஏற்கெனவே போய் தட்டினார்கள். அது எப்படிப்பட்ட வலை பின்னப்பட்டது என்பதையெல்லாம் தன்னுடைய நுட்பமான மதி நுட்பத்தால் உணர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) அறிந்து, அந்த சதியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முறியடித்தார்கள்.

இன்னும்கூட சொல்ல வேண்டுமென்றால் அகத்தியருடைய வரலாற்றில் ஒன்றை சொல்வார்கள். அகத்தியருடைய வரலாற்றில் வாதாபி அவர் ஒரு பழத்தினுடைய உருவத்திலோ அல்லது ஆற்றினுடைய உருவத்தில் ஆகிவிடுவது என்றும், அவர் தந்திரமாக அகத்தியருடைய வயிற்றுக்குள்ளே போய், அகத்தியரை உண்டுவிட்டவுடன், வயிற்றை கிழித்துக்கொண்டு அவர் வரவேண்டுமென்று, அந்தத் திட்டமெல்லாம் தீட்டி, அந்தத் திட்டம் அகத்தியருக்கு தெரிந்த காரணத்தால் அவர் வாதாபி சுவாகா என்று உள்ளே போய், அந்த வாதாபி வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவதற்குமுன் “வாதாபி ஜீரணம் பவ” என்று சொல்லி, அந்தச் சதித் திட்டத்தை, எப்படி அகத்தியர் வயிற்றுக்குள்ளே முடித்து விட்டாரோ, (மேசையைத் தட்டும் ஒலி) அதைபோல, நான் புராணக் கதையை எதற்கு சொல்கிறேன் என்றால் அது உருவாகிற போதே, இந்தச் சதித் திட்டம் எதற்காக உருவாகிறது என்பதை உணர்ந்து “வாதாபி ஜீரணம் பவ” என அதை ஜீரணித்துவிட்டது போல (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் அந்த சதி திட்டம் உருவாகிறபோதே மதி நுட்பமாக அறிந்து, உணர்ந்து அதை அங்கேயே அதற்கான முடிவுரையை எழுதிவிட்டார் என்பது தான் நிதர்சனம். அது உங்களுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

### சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர்

# மூத்த வழக்கறிஞர் எம்.ராஜதுரை மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 25 -

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராய நகர் மேற்கு பகுதி 132 ‘அ’ வட்டக் கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் சென்னை தென்மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மறைந்த மூத்த வழக்கறிஞர் எம். ராஜதுரை அவர்கள் நேற்று (24.2.2026) எண்.13 யுனைடெட் இந்தியா காலனி, அண்ணா மெயின் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 24 என்ற முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை மற்றும் ஏராளமான கழகத்தினர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மூத்த வழக்கறிஞர் எம்.ராஜதுரை மறைவு செய்திஅறிந்த தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

### அரங்கங்கள், மணி மண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் – என

# கடந்த 5 ஆண்டு கால கழக அரசில் - 124 அமைப்புகள்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பெருமிதம்!

சென்னை, பிப்.25 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, வினா ஒன்றுக்குப் பதிலளித்த செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், “தமிழ்நாட்டில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு கடந்த ஐந்தாண்டு கால கழக அரசில் - அரங்கங்கள், மணி மண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் என்கிற வகையிலே 124 அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.



சட்டப்பேரவையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இதுகுறித்து கூறியதாவது :-

இந்த அரசு 2021 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டினுடைய வரலாற்றில் இல்லாத அளவிற்கு 5 ஆண்டு காலத்திலே ஏறத்தாழ அரங்கங்கள், மணிமண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் என்கிற வகையிலே 124 அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அதில் சில பணிகள் நடைபெற்று வருகின்றன. சில பணிகள் இன்னும் ஒரு 10 நாட்களுக்குள் சில சிலைகள் எல்லாம் திறக்கப்படவிருக்கின்றன. ஆனால், 5 ஆண்டு காலத்திலேகூட அல்ல, 10 ஆண்டு காலத்தில் 2011 முதல் 2021 வரை மணிமண்டபங்கள், சிலைகள், நினைவுச் சின்னங்கள் என்கிற வகையில் 30 எண்ணிக்கையில்தான் அது அமைக்கப்பட்டன. ஆனால் இந்த 5 ஆண்டு காலத்திலே 124 அமைப்புகள் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறிப்பிட்டார்.



வேலூர் வடக்கு மாவட்டம் காட்பாடி தெற்கு ஒன்றியம் கீரைசாத்து ஊராட்சி அ.தி.மு.க. கிளை கழக செயலாளர் வினோத் குமார் மற்றும் தவெக ஊராட்சி பொருளாளர் குணா (எ) பெருமாள் அவர்களுடன் 100க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி வடக்கு மாவட்ட பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றிய கழக செயலாளர் சி.ரவி, ஒன்றிய அவைத்தலைவர் தருமன், தெற்கு ஒன்றிய துணை செயலாளர் இன்பா, மாவட்ட பிரதிநிதி சைமன் உடனிருந்தனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்ற தொகுதி சார்பில், என்.எல்.சி, தொ.மு.ச அலுவலகத்தில், வெல்லும் தமிழ் பெண்கள் ஆலோசனைக் கூட்டத்தில் சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தொகுதி பார்வையாளர் பா.துரைசாமி, ஒன்றிய செயலர் குணசேகரன், நகர கழக பொறுப்பாளர் குருநாதன், மகளிரணி இந்துமதி, ஐ.டி.விங், சுரேஷ், வீர.இராமச்சந்திரன், பயிற்சியாளர் பிலோமினா உள்ளிட்ட மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்,